# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 26.10.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கிரக நிலைகள் கொண்ட வானத்தை நான் சான்றாகக் காட்டுகிறேன். வாக்களிக்கப்பட்ட நாளையும், சாட்சி கூறுபவரையும் சாட்சி கூறுப்படுவரையும் (நான் சான்றாகக் காட்டுகிறேன். அகழ்களுக்குரியவர்கள் விபத்தில் அழிக்கப்பட்டனர். (அதாவது) எரிபொருள் ஊட்டப்பட்டுள்ள நெருப்பிற்குரியவர்கள். அவர்கள் அதன் அருகில் உட்கார்ந்திருந்த நேரத்தில், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களுக்குச் செய்ததற்கு அவர்களே சாட்சிகளாக இருந்தனர். வல்லவனும் மிகுந்த புகழுக்குரியவனுமாகிய அல்லாஹ்விடம் அவர்கள் நம்பிக்கை கொண்ட ஒரே காரணத்திற்காகவே அவர்களிடம் அவர்கள் வெறுப்பு கொண்டனர். வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்கே உரியதாகும். அல்லாஹ் எல்லாவற்றிற்கும் சாட்சியாவான். நம்பிக்கை கொண்ட ஆண்களையும், நம்பிக்கை கொண்ட பெண்களையும் துன்புறுத்தி பின்னர் தவ்பா செய்யாதவர்களுக்கு நிச்சயமாக நரகத் தண்டனையும் உண்டு. எரிக்கக்கூடிய தண்டனையும் உண்டு. ஆனால் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்பவர்களுக்கு நிச்சயமாக தோட்டங்கள் உண்டு; அவற்றிற்கிடையே ஆறுகள் ஓடும். இதுவே மாபெரும் வெற்றியாகும்.

இந்த வசனங்கள் சூரத்துல் புரூஜின் வசனங்களாகும். இவ்வசனங்களில் இஸ்லாத்தின் அசல் போதனை பற்றியும் அது எல்லா காலத்திலும் பாதுகாப்பாக இருக்கும் என்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது. மேலும் இதில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவார் என்ற கருத்தும் உள்ளது. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தைப் பற்றியும் அவர்களது எதிரிகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் தியாகம் செய்வதற்காக ஆயத்தப்படுத்தப் –பட்டுள்ளார்கள். அதாவது மிக நீண்ட காலமாக உங்களுக்கு இழைக்கப்படவுள்ள எதிர்ப்புகள் மற்றும் துன்பங்களை எதிர்கொள்ள ஆயத்தமாக இருங்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அல்லாஹ் இவ்வனைத்தையும் பார்த்து அமைதியாக இருக்க மாட்டான். மாறாக, ஒருநாள் வரும். அப்போது ஈமான் கொண்டவர்களை துன்புறுத்தும் இம்மக்கள் நரகத்தின் தண்டனையை சந்திப்பர். மேலும் எந்த நெருப்பில் இவர்கள் அஹ்மதிகளை எரிக்க விரும்புகின்றார்களோ அல்லது எரிக்கின்றார்களோ – எரிக்க முயற்சி செய்கின்றார்களோ அதைவிட பெரிய நெருப்பில் இவர்கள் எரிவார்கள். ஆனால் அஹ்மதிகளுக்கும், ஈமான் கொண்ட ஆண்களுக்கும் ஈமான் கொண்ட பெண்களுக்கும் சொர்க்கங்கள் உள்ளன. வெற்றிகள் உள்ளன.

ஜமாஅத்திற்கு – அது ஜமாஅத் என்ற அளவில் இவ்வுலகிலும் வெற்றிக்கான நற்செய்தி உள்ளது. ஒவ்வொரு மூஃமினுக்கும் சொர்க்கத்தின் வெற்றிகரமான வாழ்க்கை உண்டு என்ற நற்செய்தி உள்ளது. இதுவே இவ்வசனங்களிலுள்ள கருத்துக்களின் சாராம்சமாகும். நாம் இதில் இன்னும் சற்று ஆழமாக சிந்தித்து இதன் விளக்கத்திற்குச் சென்றால், இன்றைய நாட்களில் ஜமாஅத்தின் நிலையைப் பற்றியும் சிந்தித்தால் திருக்குர்ஆனின் உண்மை மீது நம்பிக்கை இன்னும் அதிகரிக்கிறது. ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மைத்தன்மையின் மீது நம்பிக்கை இன்னும் அதிகரிக்கிறது. அல்லாஹ்வின் இருப்பின் மீது ஈமானும் உறுதிப்பாடும் இன்னும் அதிகரிக்கிறது. முன்னறிவிப்பின் வடிவில் 1500 வருடங்களுக்கு முன் இறைவன் ஒரு கருத்தைக் கூறுகிறான். ஒரு காட்சியை வடிவமைக்கிறான். அது அவ்வாறே இன்று பூர்த்தியாகிறது. இஸ்லாம் எல்லா காலத்திலும் பசுமையாக இருக்கும். அது குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட பகுதியிலும் மக்களிடமும் அது நிலைத்திருந்தது என்றாலும், இறைவன் அதற்கு ஆறுதல் வழங்குகின்றான். இவ்வாறு நிகழ்ந்தும் விடுகிறது.

பிறகு ரஸூல் (ஸல்) அவர்களின் நோக்கம் மற்றும் தூதுச் செய்தியைப் பரப்பும் ஒரு வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையைப் பற்றி நற்செய்தி வழங்குகிறான். அவர் இஸ்லாத்தை குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட

மக்களித்தோ அல்லது பகுதியிலோ அல்லாமல் முழு உலகிலும், முழு சமுதாயத்திலும் பரப்பி ரஸுல் (ஸல்) அவர்களின் உண்மைத் தன்மையின் பிரகாசத்தை உலகிற்கு காட்டுவார் என்ற முன்னறிவிப்பும் நமக்கு இதில் தென்படுகிறது. மேலும் இந்த தூதுச் செய்தியைப் பரப்புவதற்காக உலகத்தின் எல்லா நாடுகளிலும் ஒரு ஜமாஅத்தை நிறுவி அல்லாஹ் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களிடம் கூறிய கூற்றாகிய குல் யா அய்யுஹன்னாஸு இன்னீ ரஸூலுல்லாஹி இலைக்கும் ஜமீஆ என்பதன் மெய் ஞானத்தையும் ஜமாஅத்திற்கு இந்த சாட்சி கூறுபவராகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வழங்கினார்.

ஆக, இவையனைத்தும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் உண்மைத் தன்மையையில் பட்டப்பகல் போல் வெட்ட வெளிச்சம் ஆக்குகிறது; வெளிப்படுத்திக் காட்டுகிறது. வாக்களிக்கப்பட்ட மஸீஹுடைய ஜமாஅத்தின் அங்கத்தினராக ஆனதால் நாம் அந்த சாட்சி கூறுபவருடன் இணைந்திருக்கிறோம். அவர் அந்த மகத்துவமிக்க சாட்சி கூறப்பட்டவரின் உண்மைத்தன்மைக்கு சன்று பகர்ந்து, ரஸுல் (ஸல்) அவர்களின் குறிக்கோள் மற்றும் பணியை வளர்ச்சியடையச் செய்வதற்காக வந்தார்கள். இவ்வகையில் நாம் அதிர்ஷ்டசாலிகள் ஆவோம். ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மைத்தன்மையை உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டுவதற்காக அல்லாஹ் அவரை தன் அருளைக் கொண்டு அனுப்பினான். திருக்குர்ஆனின் அழகிய போதனையின் உண்மைத்தன்மை, அது எல்லாவற்றையும் விட சிறப்பும் மேன்மையும் உடையது என்பதை உலகிற்கு நிரூபிப்பதற்காக அல்லாஹ் அனுப்பினான். அவர் இஸ்லாத்தில் ஊடுருவி விட்ட, சேர்ந்து விட்ட எல்லா வீணானவற்றையும் விட்டு தூய்மையான இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகின் முன் வைத்தார். அவர் ரஸூல் (ஸல்) அவர்களின் மேன்மை மற்றும் உயர்வை உலகின் முன் எடுத்துக் காட்டினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் புரிவதற்கு முன் இஸ்லாத்தின் நிலையைக் கண்டு மக்கள் சாட்சி கூறும் ஒருவரின் அவசியத்தை உணர்ந்தனர். இஸ்லாத்திற்காக உள்ளத்தில் வேதனை கொண்டிருந்தவர்கள் நிம்மதியற்றிருந்தனர். எனவே, ஹாலி என்ற கவிஞர், மார்க்கமும் எஞ்சி இல்லை. இஸ்லாமும் எஞ்சி இல்லை. இஸ்லாத்தின் பெயர் மட்டுமே எஞ்சியுள்ளது. என்று கூறினார். இந்த குரல் ஒரு தனி மனிதனுடைய குரல் மட்டும் இல்லை. மாறாக, பல்வேறு இடங்களிலிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றம் காலத்தின் தேவைக்கு முற்றிலும் பொருத்தமான தோற்றமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை மற்றும் தேவை அன்னாரது காலத்தில் மட்டும் உணரப்படவில்லை. மாறாக, இன்றும் கூட ஒரு சீர்திருத்தவாதி மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது உண்மையான அன்பு கொள்ளும் ஒருவரை உலகம் தேடுகிறது. அல்லது தேட விரும்புகிறது. ஒருவர் வர வேண்டும். அவர் வந்து முஸ்லிம்களின் தற்போதைய நிலையை சீர்திருத்த வேண்டும் என்பது நல்ல இயல்பு கொண்ட ஒவ்வொருவரின் குரலாக உள்ளது.

இவ்வாண்டு ஜல்ஸாவின் உரையில் நான் இதற்கான விளக்கமும், அந்நியர்களின் கூற்றுக்களையும் வாசித்துக் காட்டி விட்டேன். எனவே இப்போது அந்த விளக்கத்திற்கு நான் செல்லமாட்டேன். எனினும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக அல்லாஹ் தோற்றுவித்தான் என்பதை ஒவ்வொரு அஹ்மதியும் நன்கறிவார். அஹ்மதிகள் மட்டுமல்ல. நல்ல இயல்பு கொண்ட, ஜமாஅத்தைச் சேராத நபர்கள் கூட இந்தக் கருத்தை ஒப்புக் கொள்கிறார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் தான் இஸ்லாத்திற்கு தொண்டாற்றும் கடமையை செய்து வருகிறது.

கடந்த குத்பாக்களிலும் நான் கூறியிருந்தேன். வழக்கறிஞர்களின் ஒரு கூட்டத்திலும் அவர்கள் வழக்கறிஞர்கள் சார்பாக ஏதாவது முயற்சி செய்ய முடியும் என்றால் அதை அஹ்மதிய்யா ஜமாஅத் தான் ஒருங்கிணைத்து செய்ய முடியும் என்று கூறினார்கள். எந்தவொரு விவகாரத்தையும் எடுத்துப் பாருங்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சார்பாக முயற்சிகள் செய்யப்படுகிறது. அப்போது நல்லியல்பு கொண்ட மக்கள் இந்த ஜமாஅத் தான் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. இதுதான் இவ்வாறு செய்ய முடியும் என்கிறார்கள். இது தான் உண்மை. நீதியின் கண்கொண்டு பார்த்தால் இது இன்னும் தெளிவாக தென்படுகிறது. இக்காலத்தில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மைத் தன்மைக்கு சாட்சி பகர்பவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்

மட்டுமே ஆவார்கள். இதற்கான முன்னுதாரணம் வேறு எங்கும் கிடைப்பதில்லை. அவர்களின் போதனையின் விளைவாக அவர்களால் நிறுவப்பட்ட ஜமாஅத் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு எதிராக உயர்த்தப்படும் ஒவ்வொரு கையையும் தீய வார்த்தைகளைப் பேசும் ஒவ்வொரு நாவையும் தடுப்பதற்கான சரியான எதிர்நடவடிக்கையை வெளிப்படுத்துகிறது. இதற்கு மாற்றமாக பிற முஸ்லிம்களின் எதிர்நடவடிக்கை எவ்வாறு உள்ளதென்றால், இஸ்லாத்தின் எதிரி சக்திகளுக்கு இஸ்லாத்திற்கு எதிராக இன்னும் அதிகமாக பேசவும், ஏளனம் செய்யவும், எள்ளி நகையாடவும் வாய்ப்பை வழங்கும் விதமாக உள்ளது. பெயர் தாங்கிய ஆலிம்கள் இவ்வாறான மார்க்கத் தீர்ப்புகளை வழங்குவதை அவர்கள் பார்க்கின்றனர். அவர்கள் கொடுக்கும் மார்க்கத் தீர்ப்பு கொலை மற்றும் வெறியைத் தூண்டும் தீர்ப்புகளாகும். அல்லது தமது நாடுகளிலேயே தமது சொத்துக்களுக்கு நெருப்பு வைக்கவும் தமது மக்களையே கொலை செய்யவும் தூண்டுவதற்கும் இதுவே இவர்கள் காட்டும் எதிர்நடவடிக்கையாகும். ஆனால் இம்மக்கள் அஹ்மதிகள் காட்டும் எதிர்நடவடிக்கையைப் பார்க்கும் போது நீதியை விரும்பும் நபர்கள், ஜமாஅத்தைச் சேராதவர்கள் அவர்களது இயல்பில் ஓரளவு நேர்மை உள்ளது. இவர்கள் அஹ்மதிகளின் மூலமாக இஸ்லாத்தின் உண்மையான போதனையைக் கேட்கும் போது அவர்களுள் சிலர் வெட்கப்படுகிறார்கள். ரஸூல் (ஸல்) அவர்களுக்கு எதிராக பேசுபவர்கள் அல்லது ஏளனம் செய்பவர்களை நிந்திக்கின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அங்கிருந்து ஓர் அஹ்மதி எனக்கு கடிதம் எழுதினார். ஒரு நிகழ்ச்சியில் ஒரு கிறிஸ்தவ பெண் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து கூறினார். அப்போது என் கண்களில் கண்ணீர் வந்து விட்டன. அல்லாஹ் இவர்களுக்கு மத்தியிலேயே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் உண்மையான உயர் பதவியை எடுத்துரைக்கும் மக்களை உருவாக்கி விட்டான். எவ்வாறிருப்பினும், எல்லா இடங்களிலும் மக்கள் ஒரே மாதிரி இருப்பதில்லை. நல்லவர்களும் உள்ளனர்; தீயவர்களும் உள்ளனர்.

எனவே நாம் இதை இன்னும் உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்ட வேண்டும். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இன்னும் அதிகமாக வெளிச்சமிட்டு உலகிற்கு காட்டுவதே அஹ்மதிகள் செய்யும் எதிர்நடவடிக்கையாகும். இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகின் முன் எடுத்து வைக்க வேண்டும். உலகிற்கு ஈடேற்றத்தை வழங்கக் கூடியவர் இப்போது இந்த நபி தான் என்று உலகிற்கு எடுத்துக் கூற வேண்டும். இஸ்லாத்தின் போதனை தான் முழுமையான போதனை என்பதை உலகிற்கு சொல்ல வேண்டும். இறைவன் பக்கம் கொண்டு செல்லும் வழியைக் காட்டும் போதனை இதுவேயாகும் என்று உலகிற்கு கூற வேண்டும். எனவே ஈடேற்றம் பெற விரும்புகிறீர்கள் என்றால் இந்த நபி மற்றும் இந்த போதனையில் இணைந்து விடுங்கள்.

ரஸூல் (ஸல்) அவர்கள் காட்டுவாசிகளை, கல்வியறிவற்றவர்களை இறை நெருக்கம் பெற்றவர்களாக ஆக்கி அவர்களை சாந்தி மற்றும் சமாதானத்தின் தூதுவர்களாக ஆக்கிவிட்டார்கள். இறை படைப்பினங்களுக்கான அன்பின் தீபத்தை உள்ளத்தில் ஏற்றினார்கள். ஆக, இது இஸ்லாம் காட்டிய அற்புதமாகும். ரஸூல் (ஸல்) அவர்கள் காட்டிய அற்புதமாகும். இந்த அற்புதங்களை காட்டுவதற்காகவும், இவ்வனைத்தையும் புதுப்பிப்பதற்காகவும் தான் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாரை உலகிற்கு அனுப்பினான். அவரது பெயர் இந்த வசனங்களில் சாஹித் என்ற சொல்லின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நான் மீண்டும் எனது முந்தைய கருத்தின் பக்கம் வருகிறேன். இறைவன் அனுப்பிய இந்த சாட்சி கூறுபவர் தாம் வாதம் புரிந்த பின்னர் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்று பாருங்கள். நான் முன்னதாக கூறியது போன்று அவரது தேவையை உணர்ந்தும், அவரது தேவையை உணர்ந்ததை வெளிப்படுத்திய பிறகும் அந்த சாட்சி கூறுபவரை அல்லாஹ் அனுப்பிய பின் இவர்கள் என்ன எதிர்நடவடிக்கையைக் காட்டினார்கள்? அவரது வாதங்களுக்கு இவர்கள் எவ்வாறு பதிலளித்தார்கள்? எவ்வாறியினும் இது இவ்வாறு தான் நடந்திருக்க வேண்டும். ஏனெனில் இவ்வாறான எதிர்நடவடிக்கையைத் தான் இம்மக்கள் காண்பிப்பார்கள் என்று இவ்வசனங்களில் இருந்து புலனாகிறது. இறைவன் இதில் இதையே சுட்டிக் காட்டுகிறான்.

அல்லாஹ் ரஸுல் (ஸல்) அவர்களின் உண்மைத் தன்மையை உள்ளங்களில் நிலைபெறச் செய்வதற்காக, திருக்குர்ஆனின் அழகிய போதனையை உலகிற்கு சொல்வதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹை அனுப்பும் போது, அவர் வரும் போது அவரும், அவரது ஜமாஅத்தும், பயங்கரமான கஷ்டங்களையும் எதிர்ப்பையும் சந்திக்க நேரிடும். இஸ்லாம் வெறும் பெயரளவில் தான் எஞ்சியுள்ளது. மார்க்கம் வெறும் பெயரளவில் தான் எஞ்சியுள்ளது என்று கூறி அவரது வருகைக்காக காத்திருந்தவர்களும், இஸ்லாம் எப்போது அழியும் என்று காத்துக் கொண்டிருந்தவர்களும் ஆகிய இவர்களது முயற்சிகள் யாவும் அந்த சாட்சி கூறுபவர் வந்ததும் ஒன்றிணைந்து விடும். அவர்கள் தாம் மூட்டிய நெருப்பில் இவர்களை போட விரும்புவார்கள்.

ஆக, இதுவே இவர்களது நிலையாகும். ஒருபுறம் முஸ்லிம்களின் நிலையைப் பார்த்து அழுதார்கள். இப்போது வரை அழுது கொண்டிருக்கிறார்கள். மறுபுறம் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரை எதிர்ப்பதிலும் எல்லையைக் கடந்து விட்டார்கள். அல்லாஹ் கூறுகிறான்: எதிர்ப்பின் நெருப்பை மூட்டும் இம்மக்கள் மீது சாபமும் உண்டு. இவர்கள் அழிந்து விடுபவர்கள் ஆவர். ஆனால் இதனால் மட்டும் மூஃமின்கள் மகிழ்ச்சி அடைந்து விட வேண்டாம். மூஃமின்களுக்கு எல்லா நிலையிலும் தியாகங்கள் செய்ய வேண்டியது வரும். இந்த தியாகங்கள் ஒன்றும் தற்காலிகமானதோ சிறிது நேரத்திற்காகவோ இருக்காது. மாறாக, அவ்வப்போது இந்த எதிர்ப்பும் இந்த நெருப்பும் மூட்டப்பட்டுக் கொண்டே இருக்கும். அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் முன்னேற்றம் இந்தக் கடினம் மற்றும் தியாகத்தின் விளைவாகவே நிகழும். இந்த அநியாயங்களின் விளைவாகவே நிகழும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் தமது நாட்களிலும் தமது கூற்றுக்களிலும் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். எனவே அஹ்மதிகளை எதிர்ப்பது, அஹ்மதிகளுக்கு பொருள் இழப்பை ஏற்படுத்துவது, அஹ்மதிகளுக்கு உயிரிழப்பை ஏற்படுத்துவது, அஹ்மதிகளை ஊர் நீக்கம் செய்தல், இது சில நாடுகளில் நடக்கிறது. பாகிஸ்தானில் இன்றைய நாட்களில் எல்லைமீறி விட்டது. அஹ்மதி குழந்தைகளிடம் பள்ளிக்கூடங்களிலும், கடைவீதிகளிலும் கடினமாக நடந்து கொள்தல், ஆசிரியர்கள், உடன் படிக்கும் பையன்கள் ஆகியவர்கள் இழைக்கும் துன்பம், கல்வியின் அடிப்படையிலும் அஹ்மதிகளை சீரழிக்கும் முயற்சி, பல்கலைக்கழகங்களின் பயிலும் நமது சிறந்த மாணவர்களை வெளியேற்றுதல் ஆகிய இவை அனைத்தையும் இறைவன் முன்னதாகவே கூறிவிட்டான். இவை நிகழும். பல்வேறு விதமாக நெருப்புகள் மூட்டப்படும். அதில் போடுவதற்கு முயற்சி செய்யப்படும். அஹ்மதிகளுக்கு எதிராக 1973 –லும் அதற்குப் பிறகும் நடந்த பல்வேறு கலவரங்களில் வீடுகளுக்கு உண்மையிலேயே நெருப்பு வைக்கப்பட்டது. அஹ்மதிகளை அவர்களது வீட்டிலேயே வைத்து உயிருடன் எரிப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. இதை காவல்துறையும் பொதுமக்களும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் இது தவிர இன்னும் பலவகை நெருப்புகள் இதில் அடங்கும். இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக தோன்றும் வாக்களிக்கப்பட்டவர் மற்றும் அவரை ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களுடனும் மிகவும் கடினமான அநீதியிழைக்கப்படும். இந்த அநீதி, முஸ்லிம்கள் புறமிருந்தும் இழைக்கப்படும் என்று இறைவன் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களுக்கு முன்னதாகவே தெரிவித்து விட்டான்.

ஹதீஸ்களில் வருகிறது. முஸ்லிம்களின் நிலை சீர்கெடும். இறைவன் ரஸுல் (ஸல்) அவர்களிடம் கேட்கும் போது நான் அவர்கள் மத்தியில் இருந்த வரை நான் அவர்களை கண்காணிப்பவனாக இருந்தேன். அதன் பின் இவர்கள் சீர்கெட்டு விட்டதை அல்லாஹ்வே நன்கறிவான் என்று ஹஸ்ரத் ஈஸா (அலை) கூறிய பதிலையே கூறுவார்கள். அந்த சீர்கேட்டை சரிசெய்வதற்காக அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹை அனுப்புவான். அவருக்கு எதிராக இம்மக்கள் நெருப்புகளை மூட்டுவார்கள். எனவே மூட்டுகிறார்கள்.

இதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மை ஆயத்தப்படுத்தியுள்ளார்கள். பல்வேறு இடங்களில் கூறியுள்ளார்கள். சில இடங்களில் மிகவும் வலியுறுத்தி இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். அதாவது சோதனை துன்பம் ஆகியவை நிறைந்த காலம் வரும். அப்போது அதை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இறுதி வரை பொறுமை காப்பவர்கள். அவர்கள் மீது துன்பத்தின் பூகம்பமே வரும். சோதனைகளின் புயல் வீசும், சமுதாயங்கள் ஏளனம் செய்யும் உலகம் அவர்களுடன் மிகவும் வெறுப்புடன் நடந்து கொள்ளும். அவர்கள் இறுதியில் வெற்றி பெறுவர். அருள்களின் கதவுகள் அவர்கள் மீது திறக்கப்படும்.

கூறுகிறார்கள்: ஈமான் கொண்டவர்கள் உலகத்தின் கலப்படம் ஏதுமில்லாத, நயவஞ்சகம் அல்லது கோழைத்தனத்தால் மாசுபடாத, கீழ்படிதலின் எந்த நிலையும் இழக்காத உறுதியான நம்பிக்கை கொள்பவர்கள் இறைவனுக்கு விருப்பமானவர்களாவர் என்று எனது ஜமாஅத்திற்கு தெரிவிக்குமாறு இறைவன் என்னிடம் கூறினான். இவர்களது பாதை தான் உண்மையின் பாதையாகும் என்று இறைவன் கூறுகிறான்.

**இஸ்லாத்தின் வெற்றி என்ற நூலில் அவர்கள் கூறுகின்றார்கள்:**

சத்தியம் வெல்லும். முந்தைய காலத்தில் வந்த இஸ்லாத்தின் பசுமை மற்றும் ஒளியின் நாள் மீண்டும் வரும். முன்பு உதித்தது போன்றே அந்த சூரியன் முழுமையாக மீண்டும் உதிக்கும். ஆனால் இப்போது அதே போன்று அல்ல. கடும் உழைப்பும் விடா முயற்சியும் செய்து இரத்தம் சிந்தும் அளவுக்கு உழைக்காத வரை வானம் அதை உதிப்பதை தடுத்து வைக்கும். அது வெளிப்பட வேண்டும் என்பதற்காக நாம் நமது எல்லா சுகத்தையும் இழக்காத வரை நடக்காது. இப்போது கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் இதை தாங்கிக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் உழைக்க வேண்டியதில்லை என்பதல்ல. கஷ்டம் இல்லாதவர்கள் செய்யும் கடின உழைப்பு என்னவென்றால் நீங்கள் உங்களுடைய துஆக்களிலும், இறை வணக்கத்திலும் ஒரு சிறப்பான முன்னேற்றத்தை உருவாக்குங்கள். உங்கள் தொழுகைகளிலும் தஹஜ்ஜுத்களிலும் ஒரு சிறப்பான முன்னேற்றத்தை ஏற்படுத்துங்கள். மேலும் இஸ்லாத்தின் கண்ணியத்திற்காக எல்லா இழிவையும் தாங்கிக் கொள்ளாத வரை இது நடக்காது.

கூறுகின்றார்கள்: இஸ்லாத்தின் உயிர்பெறுதல் நம்மிடம் ஒரு தியாகத்தை எதிர்பார்க்கிறது. அது என்ன? அது நாம் இதே வழியில் மரணிப்பதாகும். இந்த மரணத்தில் தான் இஸ்லாத்தின் வாழ்வு, முஸ்லிம்களின் வாழ்வு உயிருள்ள இறைவனின் வெளிப்பாடு ஆகியவை அடங்கியுள்ளது. நிச்சயமாக இறுதி வெற்றி நமதே. இஸ்லாத்தின் வெற்றி நிச்சயமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் அவர்களது ஜமாஅத்தைச் சார்ந்ததாகும். ஆனால் நாம் அதற்காக முயற்சி செய்ய வேண்டும். இந்த வசனத்தில் இறைவன் நமக்கு கவனமூட்டுகிறான். அதாவது ஈமானை பாதுகாப்பதற்காக நீங்கள் நெருப்பில் எரிவதற்கு ஆயத்தமாக இருங்கள் என்று கூறி ஒரு எதிர்ப்பின் படம் இங்கு வரையப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் அவ்வப்போது அஹ்மதிகளுக்கு எதிராக எதிர்ப்பின் நெருப்பு மூட்டப்பட்டு வருகிறது. ஆனால் முன்பு எப்போதும் காணப்படாத அளவு கடந்த இரண்டு வருடங்களாக இதில் வேகம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானில் முன்பு எப்போதும் செய்யப்படாத அளவு உயிர் தியாகம் கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் செய்யப்பட்டுள்ளது. இந்த தியாகங்கள் வீணாக போவதற்காக கொடுக்கப்படவில்லை. மாறாக வெற்றிகளை வழங்குவதற்காக கொடுக்கப்படுகின்றன. இந்த வெற்றிக்கான ஆறுதலையும் இறைவன் வழங்கியுள்ளான். வெற்றிகள் இந்த தியாகங்களின் விளைவாகவே கிடைத்தன என்பதற்கு வரலாறு சாட்சியாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சஹாபா (ரலி) அவர்களின் வாழ்க்கையை சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் மார்க்கத்திற்காக என்னென்ன துன்பங்களை சகித்துக் கொண்டார்கள்! என்னென்ன துக்கங்களுக்கு ஆளானார்கள். அவர்கள் பகலிலும் ஓய்வு எடுக்கவில்லை. இரவிலும் ஓய்வு எடுக்கவில்லை. இறைவழியில் எல்லா கஷ்டங்களையும் ஏற்றுக் கொண்டார்கள். உயிரைக் கூட தியாகம் செய்து விட்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த வார்த்தைகள் மற்றும் அவர்கள் ஜமாஅத்தின் மீது கொண்டிருந்த தியாகத்தின் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை இன்றும் ஜமாஅத் நன்றாக புரிந்திருக்கிறது. ஞாபகம் வைத்திருக்கிறது. மகிழ்ச்சியுடன் ஜமாஅத்திற்கு தியாகம் செய்கிறார்கள். நான்

ஏற்கனவே கூறியது போன்று கடந்த இரண்டு ஆண்டுகளாக எண்ணற்ற ஜமாஅத்துகள் உயிர் தியாகம் செய்திருக்கின்றன

எனக்கு ஒரு பெண் கடிதம் எழுதினார். அதில் கூறுகிறார்: கடந்த நாட்களில் கராச்சியில் நிகழ்ந்த சஹாதத் சம்பவத்தில் ஒரு வாலிபர் சஹீதானார். அதற்கு இரங்கல் தெரிவிப்பதற்காக நான் போன் செய்தேன். அவர்களின் ஏதோவொரு நெருங்கிய உறவினர் (பெண்) சஹீதின் தாய் அல்லது சகோதரி கூறினார். நீங்கள் எங்களுக்கு வாழ்த்து தெரிவியுங்கள். எங்களது வீட்டிற்கும் சஹாதத்தின் பதவி கிடைத்துள்ளது என்றார்கள்.

இது லாஹூரின் சஹாதத்தினாலும் மண்டி பஹாவுத்தீன் அல்லது கட்டியாலியா அல்லது கராச்சியைச் சார்ந்ததாக இருந்தாலும் சரி தியாகத்தின் இந்த ரூஹ் எல்லா இடங்களிலும் எல்லா அஹ்மதியிடமும் தென்படுகிறது. இதில்தான் நமது வெற்றி உள்ளது என்பதை அஹ்மதிகள் அறிவார்கள்.

எனவே அஹ்மதிய்யத்தின் எதிரிகளே! நீங்கள் லாஹூரில் ஒரு சில டசன் சஹாதத்துகள் செய்த பின்பும் எந்த அஹ்மதியையும் அஹ்மதிய்யத்தை விட்டு உங்களால் விலக்க முடியவில்லை. அஹ்மதிகளின் ஈமானை அசைக்க முடியவில்லை. அவ்வாறே கராச்சியின் அஹ்மதிகளின் ஈமானையும் உங்களால் அசைக்க முடியாது. இவர்களது ஈமானில் ஒருபோதும் குறைவு ஏற்படாது. இன்சா அல்லாஹ். இன்று உண்மையான முறையில் அஹ்மதிகள் இந்த தியாகத்தின் ரூஹை புரிந்து கொண்டுள்ளனர். இன்சா அல்லாஹ் வரும் காலத்திலும் புரிந்து கொண்டிருப்பார்கள். இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக எல்லா வகையான தியாகங்களும் செய்ய வேண்டியது வரும் என்று அவர்களுக்குத் தெரியும். கராச்சியில் சஹாதத் நிகழ்ந்தது என்று நான் குறிப்பிட்டேன்.

கடந்த நாட்களில் கராச்சியில் ஏறக்குறைய ஒருவார காலத்தில் அல்லது சில நாட்களுக்குள் மூன்று சஹாதத்துகள் நடந்துள்ளன. சிலர் காயமடைந்துள்ளனர். கடந்த ஜுமுஆவில் நான் அதை குறிப்பிட்டேன். அவர்களில் சிலரது நிலை மிகவும் கவலைக்கிடமாகவே உள்ளது. ஆனால் நான் முன்னதாக கூறியது போன்று, இவர்களால் இவர்களின் உறவினர்களின் ஈமானையும் அசைக்க இயலாது. பெண்களுக்கு நான் ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறினேன். எதிரி முழுமையாக முயற்சி செய்து கொண்டிருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை. நெருப்பையும் மூட்டி விட்டு அதை கண்காணிக்கவும் செய்கிறான். இஸ்ஹூம் அலைஹா குஊது என்ற நிலையை உருவாக்குகிறார்கள். அஹ்மதிகளுக்கு எப்படி இழப்பை ஏற்படுத்தலாம்? அவர்களை எரிக்கும் முயற்சி எவ்வாறு வெற்றி பெறுகிறது? என்று கண்காணித்து அதே பணியில் அமர்ந்திருக்கிறார்கள். எதிரிகள் அஹ்மதிகளை எரிக்க தம் சார்பாக முயற்சிகள் செய்கிறார்கள்; எதிர்க்கிறார்கள்.

இப்போது இன்னோர் நிலையும் நம்முள் வந்துள்ளது. கராச்சியில் நடந்த சம்பவமாகும். ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் சஹீதாக்கப்பட்டனர். மவ்லவிகள் அல்லது அவர்களது அடிவருடிகள் மருத்துவமனைக்கும் வந்து விட்டனர். மருத்துவமனையில் இவர்களுக்கு சிகிச்சை அளிக்கக் கூடாது என்று அழுத்தம் கொடுப்பதற்காக வந்தனர். முதலில் துப்பாக்கியால் சுட்டு விட்டு போதாதென்று அவர்களுக்கு சிகிச்சை கிடைக்கக் கூடாது என்று கண்காணிக்கவும் செய்கின்றனர். ஆக இதுவே இந்த அநியாயக்காரர்களின் நிலையாகும். இவர்கள் அகில உலகிற்கும் அருட்கொடையாக வந்தவரின் பெயரைக் கொண்டு இந்த அநியாயத்தை செய்கின்றனர். இவர்கள் இதை செய்தபின் ரஸூல் (ஸல்) அவர்களின் பெயரைக் கூறுவதே உண்மையில் கொடுமையாகும். தமது அநீதியிலும் சீர்கேட்டிலும் திரையிடுவதற்காக அவர்களது பெயரை பயன்படுத்துகிறார்கள். எனவே நிச்சயமாக இவர்கள் அல்லாஹ்வின் பிடியில் வருவார்கள். ஏனெனில் இவர்கள் அறிவில்லாத பொதுமக்களை தம்முடன் இணைத்துக் கொண்டு அவர்களைத் தூண்டிவிட்டு, அவர்களின் உணர்வுகளைத் தூண்டி மார்க்கம் என்ற போர்வையில் அஹ்மதிய்யத்தின் மீது பெரும் அநீதியிழைக்கிறார்கள். நான் குறிப்பிட்டது போன்று இவர்கள் தெரிந்து கொண்டே ரஸூல் (ஸல்) அவர்களின் போதனைக்கு எதிராக அவர்களின் பெயரால் அநீதியிழைக்கிறார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: அவர்களுக்கு நரக தண்டனை உண்டு. நெருப்பின் தண்டனையும் உண்டு. இவ்வுலக தண்டனையும் உண்டு. மறுவுலக தண்டனையும் உண்டு. இவர்கள் தவ்பா செய்து விட்டால் மன்னிக்கப்படலாம் என்று அல்லாஹ் கூறுகிறான். எனவே தவ்பா செய்யாமல் மூஃமின் ஆண்கள் மற்றும்

மூஃமின் பெண்கள் மீது அநியாயம் இழைத்துக் கொண்டே இருந்தால், இவ்வுலகிலும் மரணத்திற்குப் பிறகும் இவர்களுக்காக தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது என்று அல்லாஹ் கூறுகிறான்.

ஈமான் கொண்டவர்களுக்காக சொர்க்கம் உள்ளது. எனவே மகிழ்ச்சி அடையுங்கள். அவர்களுக்காக நிழல் தரும் தோட்டங்கள் உள்ளன. அவற்றிற்கு கீழே ஆறுகள் ஓடுகின்றன. இவ்வுலகில் சந்தேகமின்றி எல்லாவித துன்பத்தையும் இழைத்து எதிரிகள் இவ்வுலகில் நமக்கெதிராக நெருப்புகளை மூட்டுகின்றனர். ஆனால் அல்லாஹ்விடம் இந்த மூஃமின்களுக்காக குளிர்ந்த நிழல் மற்றும் குளிர்ந்த நீர் உள்ளது. ஆனால் எதிரிகளுக்கு அவர்கள் என்றென்றும் தங்குவதற்காக நெருப்பு உள்ளது. எனவே அஹ்மதிகள் இந்த எதிர்ப்பினால் சில இடங்களில் சில நேரம் மிகுந்த தொல்லைக்கு ஆளாகிறார்கள். அவர்களுள் பெரும்பாலார் பொறுமை மற்றும் தைரியத்துடன் உள்ளவர்களாவர். நீங்கள் கவலைப்பட வேண்டாம். அஹ்மதிகள் செய்யக்கூடிய தியாகங்கள் அல்லாஹ்வின் பார்வையில் 1500 வருடங்களுக்கு முன்பு திருக்குர்ஆன் இறங்கிய போதே ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன.

எனவே இது ஒரு சாதாரண கண்ணியம் இல்லை. எனவே ஒவ்வொரு அஹ்மதியும் அவர் பாகிஸ்தானில் இருந்தாலும் இந்தோனேஷியாவில் இருந்தாலும், இந்தியாவின் சின்னச்சின்ன கிராமத்தில் இருந்தாலும் அல்லது ஏதாவதொரு அரபு நாட்டில் இருந்தாலும் எங்கிருந்தாலும் சரி எதிரிகளால் மூட்டப்பட்ட நெருப்பைக் கடந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொருவரும் அல்லது பாகிஸ்தானில் நீங்கள் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்ளவில்லை நவூதுபில்லாஹ். ரஸூல் (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா என்று ஏற்றுக் கொள்வதில்லை. நீங்கள் கத்மே நுபுவ்வத்தை மறுப்பவர்களாவீர்கள் என்று கூறி துன்புறுத்தப்படும். ஒவ்வொரு அஹ்மதியும், அவ்வாறே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மை நேசருக்கு எதிராக தீய வார்த்தைகளைத் தொடர்ந்து கேட்டு, உள்ளத்தை எரிக்க முயற்சி செய்யப்படுகிறது. இவர்களது பொறுமை மற்றும் இவர்கள் செய்யும் எல்லா வகையான தியாகம் ஆகியவை அஹ்மதிகளை நிரந்தரமான சொர்க்கத்தின் வாரிசாக்கி விடும்.

நேற்று அல்லது இரண்டு நாட்களுக்கு முன் வீணான மற்றும் ஏச்சுக்களால் நிறைந்த ஒரு பிரசுரத்தை அஹ்மதி அல்லாதவர்கள் வெளியிட்டனர். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் படத்தையும் வெளியிட்டுள்ளார்கள். ஊர்வலம் போன சமயத்தில் அங்கு மக்களை நிறுத்தி வைத்தனர். அவர்கள் இந்த பிரசுரத்தை கீழே போட்டுக் கொண்டிருந்தனர். அதை மிதித்துக் கொண்டு மக்கள் நடந்து சென்று கொண்டிருந்தனர். இவ்வாறு செய்வதால் இவர்கள் தமது கற்பனையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் படத்தை நவூதுபில்லாஹ் காலடியில் மிதித்து அவர்களை பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டனர். ஆனால் இந்த வரம்பு மீறல் இவர்களுக்காக நரக நெருப்பை நிர்ணயிக்கக் கூடியதாகும்.

நான் கூறியது போன்று கராச்சியில் மூன்று சஹாதத் நடைபெற்றுள்ளது. இன்றைய நாட்களில் அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் கவனம் கராச்சியின் பக்கம் உள்ளது. இப்போது நான் இந்த சஹீதுகளின் ஜனாஸாவும் தொழ வைப்பேன். அல்லாஹ் இந்த சஹீதுகளின் தர்ஜாவை உயர்த்துவானாக! ஒவ்வொரு சஹீதின் இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் அஹ்மதியின் முன்னேற்றத்தை இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மடங்கு அதிகரிக்கக் கூடியதாக இருக்கட்டுமாக! ஜமாஅத்தின் வளர்ச்சிக்காக தியாகங்கள் செய்வதும் அவசியமாகும். ஆனால் அல்லாஹ் இந்த தியாகங்களை ஏற்றுக் கொண்டவாறு நமக்கு வெற்றிகளின் காட்சியையும் விரைவாக காண்பித்தருள்வானாக! என்றும் நாம் துஆ செய்ய வேண்டும். அவ்வாறே நோயுற்றவர்களுள் மூன்று நான்கு பேர் காயமடைந்துள்ளனர். அவர்களின் உடல் ஆரோக்கியத்திற்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு முழுமையான விரைவான ஷிஃபாவை வழங்குவானாக!

இப்போது நான் ஷுஹதாக்களைப் பற்றி ஒரு சிலவற்றை எடுத்துக் கூறுகிறேன். முதல் சஹீது, மதிப்பிற்குரிய ஃபரூக் அஹ்மது காஹ்லுன் சாஹிபின் மகன் மதிப்பிற்குரிய ஸாத் ஃபரூக் சாஹிப் ஆவார். இவரை அக்டோபர் 19 ஆம் தேதி சஹீதாக்கப்பட்டார். பல்தியா டவுண் கராச்சியில் ஸாத் ஃபரூக் சாஹிப் உடைய

குடும்பத்தில் இவரது தந்தை வழிகொண்டு பாட்டனார் அல்லாஹ் பக்ஷ் சாஹிப் காஹ்லூன் சேகுபூராவைச் சேர்ந்தவர். இவர் மூலமாக அஹ்மதிய்யத் கிடைத்தது. இவர் சக் என்ற தம் ஊரிலிருந்து காதியானுக்கு நடந்து சென்று பைஅத் செய்தார். பிறகு 1962 -ல் கலைய்யா சென்று விட்டார்கள். பின்பு தொழில் நிமித்தமாக சஹீதின் தந்தையார் கராச்சியில் குடி அமர்ந்தார். சஹீத் அக்டோபர் 5, 1986 -ல் கராச்சியில் பிறந்தார். எலக்ட்ரானிக் இன்ஜினியர் பட்டம் பெற்றார். அதன் பிறகு தொழில் ஈடுபட்டார். அக்டோபர் 15 ஆம் தேதி அதாவது சிறிது நாட்களுக்கு முன்பு தான் சஹீத் மர்ஹூமுக்கு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு மூன்று நாட்களுக்குப் பின் இவருக்கு சஹாதத் பதவி கிடைத்தது. இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் சஹீதான சம்பவம் இவ்வாறாகும். அக்டோபர் 19 ஆம் தேதி ஜுமுஆ நாளன்று ஸாத் ஃபாரூக் சாஹிப் மற்றும் இவரது தந்தை ஃபாரூக் அஹ்மது காஹ்லூன் சாஹிப் சதர் ஹல்கா பல்தியா டவுண், மற்ற உறவினர்களுடன் ஜுமுஆ தொழுது விட்டு வீட்டிற்கு திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்கள். ஸாத் ஃபாரூக் சாஹிப் மோட்டார் சைக்களில் இருந்தார். இவரது தந்தை ஃபாரூக் அஹ்மது சாஹிப், மாமனார் நுஸ்ரத் மஹ்மூத் சாஹிப், சகோதரர் ஹம்மாத் ஃபாரூக் சாஹிப், இவரது பெரியப்பா மன்ஸூர் சாஹிப், இவரது மாமா அஷ்ரஃப் சாஹிப் ஆகியோர் காரில் இருந்தார்கள். வீட்டின் அருகில் சென்றதும் ஸாத் ஃபாரூக் சாஹிபின் மீது மோட்டார் சைக்கிளில் முகமுடி அணிந்து வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் அவருக்கு பின்புறமிருந்து துப்பாக்கியால் சுட்டார்கள். ஒரு தோட்டா இவரது வலது பக்கம் காதுக்கு கீழ் பாய்ந்து, மறுபக்கமாக அது வெளிவந்தது. இதனால் பலத்த காயமடைந்து கீழே விழுந்து விட்டார். தாக்குதல் நடத்தியவர்கள் இந்த தாக்குதலுக்குப் பின் காரை பின்தொடர்ந்து சென்று துப்பாக்கி சூடு செய்ய ஆரம்பித்தார்கள். இதனால் காரை ஓட்டிக் கொண்டிருந்த சஹீத் மர்ஹூமுடைய தந்தைக்கு ஐந்து தோட்டாக்கள் பாய்ந்தன. இரண்டு தோட்டா இவரது வலது கையிலும், இரண்டு இவரது இடது கையிலும், ஒன்று இவரது தொண்டையை உரசிக் கொண்டும் சென்றது. சஹீத் மர்ஹூமின் தம்பி ஹம்மாத் ஃபாரூக்கிற்கு ஒரு தோட்டா நெற்றியில் பாய்ந்து, முகத்தில் கண்ணுக்குப் பின்பக்கம் மண்டை ஓட்டில் நுழைந்து உள்ளே மாட்டிக் கொண்டது. சஹீத் மர்ஹூமின் மாமனார் சவுத்ரி நுஸ்ரத் மஹ்மூத் சாஹிப் காரில் இருந்தார். இவருக்கு ஒரு தோட்டா தொண்டையிலும், இன்னொன்று நெஞ்சிலும், இன்னொரு தோட்டா வயிற்றிலும் பட்டது. இவரது நிலைமை முன்பை விட நன்றாக இருக்கிறது. எனினும் ஆபத்தை தாண்டவில்லை. அவர் வென்டிலேட்டரில் வைக்கப்பட்டுள்ளார்.

அஷ்ரஃப் சாஹிபும் காயமடைந்தார். மீதி இரண்டு பேர் பாதுகாப்பாக இருந்தனர். சம்பவம் நடந்த போது சஹீத் மர்ஹூமின் தந்தை படுகாயம் அடைந்த நிலையில் வண்டியை ஓட்டினார்கள். பின்னால் பார்த்த போது சஹீத் மர்ஹூம் சாலையில் விழுந்து கிடந்தார்கள். வண்டியை நிறுத்தி விட்டு முதலில் அவர்களிடம் வந்து அவரை வண்டியில் ஏற்றினார்கள். காயமடைந்த நிலையிலேயே வண்டியை ஓட்டிக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றார்கள். மருத்துவமனைக்குச் சென்று சேர்ந்ததும் ஸாத் ஃபாரூக் சஹீதாகி விட்டார்கள். உயிரை அர்ப்பணித்து விட்டார்கள். சஹீத் மர்ஹூம் மூஸி ஆவார். அக்டோபர் 21ம் தேதி ரப்வாவில் இவரது ஜனாஸா தொழ வைக்கப்பட்டது. சஹீத் மர்ஹூம் தமது குடும்பத்துடன் மிகவும் அன்பு கொண்டிருந்தார். இவரது தாயார் கூறுகிறார்கள். இரவு தூங்குவதற்கு முன் எங்களது அறைக்குள் வருவார். என்னுடைய காலையும் தந்தையாரின் காலையும் அமுக்குவார். எங்களுக்கு தேநீர் கொடுப்பார். A/c-யின் வெப்பநிலையை சரி செய்து விட்டு, செல்வதற்கு அனுமதி கேட்பார். எங்களுக்கு கீழ்படிதலின் எல்லா தரத்தையும் நிறைவேற்றுவார். இன்றுவரை அவர் எங்களுடைய எந்தக் கூற்றையும் மறுத்ததில்லை. எதிர்த்துப் பேசியதில்லை. இரத்த தானம் செய்வதில் இவருக்கு மிக அதிகமாக ஆர்வம் இருந்தது. இவருடைய தெருவில் அல்லது ஜமாஅத்தில் யாருக்காவது இரத்தம் தேவைப்பட்டால் முதலில் அவர் சுயமாக முன்வருவார்.

இவரது தாயார் கூறுகின்றார்கள்: நான் தடுத்தால், அம்மா! இந்த இரத்தம் வீணாகத்தானே போகப் போகிறது. யாருக்காவது பயன்பட்டால் என்ன? என்று கேட்பார். இவருடைய சகோதரி டாக்டர் சபா ஃபாரூக் கூறுகின்றார்கள். நாங்கள் சகோதர சகோதரியாகிய எங்களுக்கு மத்தியில் ஒரு நட்புறவாக இருந்தது. மிக அதிகமாக நேசிக்கும் சகோதரர் ஆவார். உனது சகோதரர் உலகை விட்டு முற்றிலும் மாறுபட்டவர் ஆவார் என்று மக்கள் கூறுவதுண்டு. வயதில் சிறியவரானாலும் எப்போதும் குழந்தைகளைப் போன்றே என்னை

நடத்துவார். மிகவும் நேர்மையானவர். தொண்டு செய்பவர். எங்களது உள்ளத்தில் மட்டுமல்லாது இவருடன் தொடர்புடைய எல்லாருடைய உள்ளத்திலும் எப்போதும் உயிர் வாழ்ந்து கொண்டே இருப்பார். அல்லாஹ் இவரது தியாகத்தை ஏற்றுக் கொள்வானாக!

இவரது மனைவி அமெரிக்காவில் வசித்து வந்தார். கூறுகின்றார்கள்: நிகாஹ்வுக்குப் பிறகு இவருடன் போனில் பேசும் போது, இவர் எனக்கு சஹாதத் கிடைக்க வேண்டும் என்று பெரும்பாலும் கூறுவார்கள். ஜமாஅத் நிகழ்ச்சியில் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொள்வார்கள். பல்வேறு ஜமாஅத் பொறுப்புகளில் இருந்தார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் அதிகமாக கலந்து கொண்டார்கள். கராச்சியின் குத்தாமுல் அஹ்மதிய்யா காயித் சாஹிப் கூறுகிறார். சஹீத் சாஹிப் பல நற்பண்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார். இவரிடம் நான் உணர்ந்தது இவரது தாழ்மைக் குணமாகும். எந்தவொரு பணியை அவரிடம் சொன்னாலும் அல்லது எந்தவொரு விசயத்தைப் பற்றி விசாரித்தாலும் அவர் எப்பொழுதும் பார்வையை தாழ்த்தி, ஜி காயித் சாஹிப்! என்று மட்டுமே பதில் கூறுவார். இவரது கட்டுப்படும் குணம் சிறப்பானதாகும். கிலாஃபத்தை நேசிப்பவராவார். எல்லா பொறுப்பாளர்களையும் அவர்களது பொறுப்பைக் கூறி அழைப்பார்கள். ஒருபோதும் பெயர் கூறி அழைக்கப்பட்டார். கடந்த ஒரு வருடமாக நான் ஜமாஅத்திற்கு எதிர்ப்பு அதிகமாக இருந்த ஒரு பகுதியை கண்காணிக்கும் பணியை இவரிடம் ஒப்படைத்தேன். இவர் இவ்வளவு சிறிய வயதுடையவராக இருந்த போதும் இவரது தைரியம் மற்றும் பணியில் காட்டிய அக்கறை மிகவும் சிறப்பானதாக இருந்தது. தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மஜ்லிஸ்களுக்கு சுற்றுப்பயணம் செல்லும் போது முழுமையான சுற்றுப்பயணம் செய்வார். இரவு நேரம் கழித்து வேலை முடிவடைந்ததற்கான தகவல் தெரிவிப்பார். நான் மிகவும் வியப்புடன் உங்களது பகுதி மிகவும் அபாயகரமான பகுதியாகும். எனவே நீங்கள் உங்களை கவனித்துக் கொள்ளுங்கள் என்று கூறுவேன். சஹீத் காட்டிய உணர்வு மிகவும் வியக்கத்தக்கதாகும். கடினமான நேரங்களில் இவரிடம் ஒப்படைக்கப்பட்ட மஜ்லிஸ்களின் எல்லாப் பணிகளையும் சிறப்பாக முடிப்பதற்கு இவர் இருந்த காரணத்தால் ஒத்துழைப்பு கிடைத்து வந்தது.

இவரது தந்தையாரும் படுகாயம் அடைந்திருந்தார். இவர் மருத்துவமனையில் இருந்தார். அவர் சஹீதான செய்தியை மறைக்க முயற்சி செய்தார்கள். ஆனால் அவர் ஸாத் சஹீதாகி விட்டான் என்று எனக்குத் தெரியும். அவர் சஹீதாகி விட்டார் என்ற எந்த கவலையும் எனக்கு இல்லை. எனக்கு எனது சஹீத் மகனுடைய முகத்தை மட்டும் காட்டுங்கள் என்று கூறி அவர் தம் சஹீதான மகனிடம் சென்று அவனது நெற்றியை முத்தமிட்டு நிரந்தரமாக வழியனுப்பி வைத்தார்.

சஹீதின் தாய், தந்தை, சகோதர, சகோதரிகள் அனைவரும் இவ்வாறு உணர்வுகளுடன் இருக்கிறார்கள் என்றால் எதிரிகளால் இவர்களை என்ன செய்ய முடியும்? சஹீதின் மாமனாரும் காயமடைந்தார். இவரது நிலை மிகவும் மோசமாக உள்ளது. இவர் அமெரிக்காவிலிருந்து தன் மகளின் திருமணத்திற்காக அங்கு சென்றிருந்தார். அல்லாஹ் இவருக்கு ஷிஃபா வழங்குவானாக!

இரண்டாவது சஹீது பஷீர் அஹ்மது பட்டி சாஹிப். இவரும் பல்தியா டவுண் கராச்சியைச் சேர்ந்தவராவார். அக்டோபர் 23 ஆம் தேதி இவரது சஹாதத் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவருடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத் தந்தைவழிப்பாட்டனார் மதிப்பிற்குரிய மியான் முஹம்மது அக்பர் சாஹிப் பைஅத் செய்ததன் மூலமாக கிடைத்தது. இவருடைய கிராமத்திலிருந்து ஒரு குழு காதியானுக்கு சென்றது. அந்தக் குழு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கையில் பைஅத் செய்தது. திரும்பி வந்ததும் இவர்கள் மூலமாக கிராமத்தில் பலர் பைஅத் செய்தனர். அவர்களில் ஒருவர் சஹீதுடைய தந்தைவழிப் பாட்டனார் ஆவார். இவரது மூதாதையர்கள் பாஜோடி சார்கோட், காஷ்மீரைச் சேர்ந்தவர்கள். பிறகு பஷீர் சாஹிப் சிந்துவில் நாஸிராபாத் மாநிலத்தில் வந்து கொஞ்ச காலம் வசித்து வந்தார்கள். இவரது சஹாதத்திற்கான சம்பவம் இவ்வாறு நிகழ்ந்தது. பல்தியா டவுணில் உள்ள இவரது கடையில் இரவு ஏறக்குறைய 9.00 மணிக்கு உட்கார்ந்திருந்தார்கள். இரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் வந்தார்கள். அதில் ஒருவரை இவரை துப்பாக்கியால் சுட்டார். மூன்று தோட்டாக்கள் பாய்ந்தன. ஒன்று இவரது கழுத்திலும், இன்னொன்று நெஞ்சிலும் பட்டது. இவர் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் வழியிலேயே சஹீதாகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவரது வயது ஏறக்குறைய 67 ஆகும். காஷ்மீரில் பிறந்தார்கள். படிப்பறிவு இல்லாதவர். கூலி வேலை பார்த்து வந்தார். 1984 –ல் கராச்சிக்கு குடிபெயர்ந்தார். அங்கு தொழிற்சாலைகளில் வேலை பார்த்து வந்தார். தமது வீட்டையொட்டி தமது கடையை அமைத்திருந்தார். கார்னரில் சின்ன கடை வைத்திருந்தார். இவர் தமது பிள்ளைகளுக்கு மிகச் சிறந்த முறையில் தர்பிய்யத் வழங்கியிருந்தார். இவருடைய ஒரு பேரன் இம்ரான் நாஸிர் கடந்த வருடம் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்வதற்காக சென்றான். வழியில் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவது பற்றி அறிவுரை செய்தார்கள். ஜமாஅத் அமைப்புடன் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குபவர். கிலாஃபத்தின் மீது அன்பை இறைவன் இவரது உள்ளத்தில் நிலைத்திருந்தான். இவருக்கு மனைவி மற்றும் இரண்டு மகன்களும் மூன்று மகள்களும் உள்ளனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் பாதுகாவலனாகவும் உதவி புரிபவனாகவும் இருப்பானாக!

மூன்றாது சஹாதத் ராஜா அப்துல் அஸீஸ் சாஹிபின் மகன் மதிப்பிற்குரிய ராஜா அப்துல் ஹமீது கான் சாஹிப் ஆவார். 1994 –ல் மதிப்பிற்குரிய செய்யது முஹம்மது ரஸா பிஸ்மால் சாஹிப் கராச்சி மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற தாயி இலல்லாஹ் ஆவார். நல்ல அறிவு படைத்த பெரியவர் ஆவார். அவருடன் டாக்டர் ராஜா அப்சல் ஹமீது சாஹிபின் தந்தை மதிப்பிற்குரிய ராஜா அப்துல் அஸீஸ் சாஹிபின் தொடர்பு ஏற்பட்டது. பல கேள்வி பதில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதன் பிறகு முதலாவதாக டாக்டர் ராஜா அப்துல் ஹமீது கான் சாஹிப் சஹீதிற்கு 1994 லேயே பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணையும் நல்வாய்ப்பு கிடைத்தது. அதற்கு சிறிது காலம் கழித்து இவரது தந்தை மற்றும் தாயும் பைஅத் செய்து விட்டார்கள். சஹீது மர்ஹூமின் மூதாதையர்கள் ஆப்கானிஸ்தானின் யூஸுஃப் ஸஹுர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். சஹீது மர்ஹூமின் தந்தைவழிப்பாட்டனார் மதிப்பிற்குரிய அப்துல் ஹமீது கான் சாஹிபின் பெயர் இவருக்கு சூட்டப்பட்டது. இவர் ஹைதராபாத் தெற்குப் பகுதியின் நவாபின் முதன்மைச் செயலர் ஆவார். சஹீது மர்ஹூம் 1972 ஆம் ஆண்டு கராச்சியில் பிறந்தார். இவர் பல்தியா டவுனில் கல்வி பயின்றார். பிறகு Nevy –ல் Foreman ஆக சேர்க்கப்பட்டார். இவர் டாக்டர் என்று அழைக்கப்பட்டதன் காரணம், இவர் தம் தந்தையாருடன் கிளினிக்கில் உட்வாருவார்கள். அங்கிருந்தவாறு சிறிது Practice செய்வார். Nevy –ன் டியூட்டியிலிருந்து திரும்பி வந்ததும் தமது கிளினிக்கில் உட்காருவார்கள். தமது தந்தையின் கிளினிக்கில் அவரோடு இருப்பார்கள். அக்டோபர் 23 ஆம் தேதி இரவு 8.45 மணிக்கு இரண்டு நபர் மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்திருந்தான். இன்னொருவன் கிளினிக்கில் நுழைந்தான். அவன் துப்பாக்கியால் அவரை நோக்கி மூன்று முறை சுட்டான். ஒரு தோட்டா அவரது இடது கன்னத்தில் பட்டு வலது கன்னம் வழியாக வெளியேறியது. இன்னொரு தோட்டா நாடியின் கீழ் பகுதியில் பட்டது. இன்னொன்று இடது பக்க தோள்பட்டையில் பட்டு இடுப்பு வழியாக வெளியே வந்தது. இந்த மூன்று தோட்டாக்கள் பாய்ந்ததால் அவர் சம்பவ இடத்திலேயே சஹீதானார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். இவர் 1994–ல் தான் பைஅத் செய்திருந்தார். ஹல்கா பல்தியா டவுனில் நவ்முபாயீன் செயலராக தொண்டாற்றி வந்தார். தஃவத்தே இலல்லாஹ் துறையின் கண்காணிப்பாளராகவும் இருந்தார். நாஸிம் தர்பிய்யத் நவ்முபாயீன் என்ற பொறுப்பிலும் இவர் இருந்தார். மிகவும் பரிவு கொண்டவர். நல்லொழுக்கமுடையவர். இவரது முகத்தில் எப்போதும் மெல்லிய புன்சிரிப்பு காணப்படும். மிகவும் மிருதுவான குரலில் பேசுபவர்.

இவரது மனைவி இவரைப் பற்றி கூறுகின்றார்கள்: இவர் நன்கு கவனிப்பவரும், அதிக பாசம் கொண்டவரும், அன்பான கணவரும் கருணை கொண்ட தந்தையும் ஆவார். மார்க்கத்திற்கு தொண்டு செய்தல், கட்டுப்படுதல், கிலாஃபத்தை நேசித்தல் ஆகியவை அவரது சிறப்புப் பண்புகளில் மிகவும் வெளிப்படையாக தென்படுபவையாகும். இவரது மனைவி கூறுகிறார்: பல்தியா டவுனில் நடந்த சஹாதத்துகளின் காரணமாக இந்த ஊரில் பதற்ற நிலை இருந்தது. சஹீது மர்ஹூம் சஹாதத்திற்கு ஒருநாள் முன்பு என்னிடம் கூறினார். சில குடும்பங்கள் இங்குள்ள சூழ்நிலையின் காரணமாக இங்கிருந்து இடம்பெயர்ந்து செல்கின்றனர். இவ்வாறு செய்வதால் எதிரி தனது சூழ்ச்சியில் வெற்றி பெற்று விடுவான் என்று கூறினார்கள். அத்துடன் அவர் அழ ஆரம்பித்தார். பிறகு கூறினார். நான் பயப்படமாட்டேன். இறைவனின் வழியில் நான் சஹீதாக விரும்புகிறேன் என்றார். பிறகு நீங்கள் பயப்படவில்லையே! என்று என்னிடம் கேட்டார். அதற்கு அவரது மனைவி கூறுகிறார். இல்லை. நானும் பயப்படவில்லை. நான் கூட உங்களுக்கும் எனக்கும்

சஹாதத் கிடைக்க வேண்டும் என்றே விரும்புகிறேன் என்றார்கள். இவரது மனைவி எழுதுகிறார்கள். எனக்கு மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர். சின்ன வயது குழந்தைகள். அவர்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு நன்மையை வழங்குவானாக! அல்லாஹ் அவர்களுக்கு பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக!

நான்காவது சஹாதத் நியாஸ் அஹ்மது பஸரா சாஹிப் ஆவார். இவர் சவுத்ரி முனீர் அஹ்மது பஸ்ராவின் மகனாவார். கட்டியாலியான் ஸியால்கோட் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவரது சஹாதத் அக்டோபர் 18 ஆம் தேதி நடந்தது. இவரது தந்தை வழிப்பாட்டனார் சவுத்ரி குலாம் ரஸுல் சாஹிப் பஸ்ரா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியின் வழித்தோன்றலில் வந்தவராவார். 1958 –ல் கட்டியாலியானில் இவர் பிறந்தார். இவரது ஊரில் எதிர்ப்பு அதிகமாக இருந்தது. இவரது அண்ணன் முதலில் சஹீதாக்கப்பட்டார். பிறகு இவரது சில உறவினர்களின் பகைமையும் இருந்தது. ஆனால் வெளிப்படையில் பார்க்கும் போது இவர் அதில் நேரடியாக ஈடுபட்டவில்லை என்றே தோன்றுகிறது. ஆனால் ஜமாஅத்தின் தொண்டுகள் மற்றும் ஒரு மரியாதையின் காரணமாக அவரது ஊரைச் சேர்ந்த மக்கள் இவரை அதிகமாக எதிர்த்தார்கள். சிலர் குறிப்பாக சில மவ்லவிகள் அந்த ஊருக்கு புதிதாக வந்துள்ளார்கள். இவருடைய பகைவர்களை தூண்டி விட்டனர். தனிப்பட்ட பகைமையை ஜமாஅத்தின் பகைமையாக ஆக்கி விடுங்கள். இவரை சஹீது ஆக்கினால் கூட கேட்பவர் யாரும் கிடையாது. ஏனெனில் யாரும் கேட்டால் இவர் காதியானியாவார். எனவே இவரை கொன்றோம் என்று கூறி விடுங்கள் என்றார்கள். ஆக, அக்டோபர் 18 ஆம் தேதி வியாழக்கிழமை இசா தொழுகைக்குப் பின் இவர் டியூட்டி கொடுக்கும் குழந்தைகளுடன் அமர்ந்திருந்தார். அதன் பிறகு அங்கிருந்து வீட்டிற்கு திரும்பிச் சென்று கொண்டிருந்தார். வழியில் இவரை சில அடையாளம் தெரியாத நபர் பிடித்து இவரை துப்பாக்கியால் சுட்டனர். இதனால் இவர் சஹீது ஆனார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

ஜமாஅத் பணிகளை மிகவும் சுறுசுறுப்புடன் செய்து வந்தார். நான்கு வருடம் காயித் மஜ்லிஸ் கட்டியாலியானில் பணிபுரிந்துள்ளர். ஆறு வருடங்களாக கட்டியாலியாவின் நாஸிர் உமூமியாகவும் இருந்தார்கள். இன்றைய நாட்களில் கட்டியாலியா உமூரே ஆமா செயலராக பணிபுரிந்து வந்தார். அத்துடன் அன்ஸாருல்லாஹ்வின் பல்வேறு பொறுப்புகளிலும் இருந்தார். ஜமாஅத்திற்காக ரோசம் கொள்பவராக இருந்தார். நிஸாமே ஜமாஅத்திற்கு கட்டுப்படும் உணர்வும் இவருக்கு அதிகமாக இருந்தது. கிலாஃபத்துடன் நேசம் கொள்பவராகவும் இருந்தார். இவர் மிகவும் ஆர்வம் கொண்டவராக இருந்தார். இறைவன் இவரது பதவிகளை உயர்த்துவானாக! இவருடன் நல்ல முறையில் நடந்து கொள்வானாக! மேலும் இவரை மன்னிப்பானாக! இவரது பிள்ளைகளுககு பெருமையையும் தைரியத்தையும் வழங்குவானாக!

இவை சஹீதுகளைப் பற்றியதாகும். இதை தவிர வஃபாத் ஆன இரண்டு நபர்களைப் பற்றியும் நான் அறிவிப்பேன். சஹீதுகளுடன் சேர்த்து இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையும் தொழப்படும். இவர்களில் ஒருவர் மதிப்பிற்குரிய அப்துர் ரஹ்மான் அல் ஜபாலி சாஹிப் சவூதி அரேபிய்யாவைச் சேர்ந்தவர் ஆவார். இவர் புதிய அஹ்மதியாவார். அக்டோபர் 9 ஆம் தேதி மாரடைப்பால் வஃபாத் ஆனார். இவரது வயது 47 ஆகும். 2010 ஆம் ஆண்டு U.K. ஜல்ஸாவில் கலந்து கொண்டார். மிகவும் அமைதியான குணமுடையவர். சிந்திக்கும் பழக்கமுடையவர். அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தின் மீது இவருக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்திக்கு அவரது நாட்டில் நல்ல வரவேற்பு கிடைக்கிறது. அங்குள்ள மக்களின் ஒரே ஈத்கா அஹ்மதிய்யத் ஆகும் என்று கூறி வந்தார். மர்ஹூம் குழந்தை பருவத்திலிருந்தே சத்தியத்தை தேடி வந்தார். இவரது வாழ்க்கையில் பொதுவான மனிதர்களை விட்டு தனித்து பல வியக்கத்தக்க சம்பவங்கள் நிகழ்ந்தன. இறுதியில் அவருக்கு அஹ்மதிய்யத்தில் அருள் கிடைத்தது. இதன் மீது அவரது ஈமான் மிகவும் உறுதியாக இருந்தது. வீட்டிலும் வெளியிலும் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் இவர் தப்லீக் செய்து வந்தார். கடந்த இரண்டு வருடங்களாக அவர் கூறியதாவது, இனி இந்த மக்களுக்கு தப்லீக் செய்ய வேண்டியதில்லை. ஏனெனில் இந்த அனைவரும் அஹ்மதிய்யத்தைப் பற்றி நன்கு அறிவார்கள். ஆனால் ஏற்றுக் கொள்ள தைரியம் காட்டுவதில்லை. எனவே இவர்களின் விவகாரம் இனி இறைவனிடம்

உள்ளது என்றார். 2010 -ல் இங்கு வந்திருந்த போதும் மிகவும் தூய்மை மற்றும் விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

**சவூதி அரேபியாவைச் சேர்ந்த ஒரு புதிய அஹ்மதி இவரைப் பற்றி இவ்வாறு எழுதுகிறார்:**

நமது சகோதரர் அப்துர் ரஹ்மானுக்கு எந்த நோயும் இல்லை. திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டதால் வஃபாத் ஆனார்கள். மர்ஹூம் எல்லாருக்கும் பிடித்தமானவர் ஆவார் என்று நாம் சாட்சி கூறுகிறோம். மிகவும் நல்லொழுக்கம் கொண்டவர். திருப்தியாக இருப்பவர். எல்லா நேரமும் இறை தியானம் மற்றும் ஸலவாத் ஓதுவதில் ஈடுபட்டிருப்பர். உலகம் இவரது பார்வையில் துச்சமாக இருந்தது. ஏழைகளுக்கு உதவி செய்வார். சதகா கொடுத்து வந்தார். பைஅத் செய்த பின் இவரது உள்ளம் உலகத்தை விட்டு முற்றிலும் விலகி விட்டது.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய இஸ்ஸத் அப்துஸ் ஸமீர் முஹம்மது ஜலால் சாஹிப் உடையதாகும். இவர் எகிப்தைச் சேர்ந்தவர் ஆவார். இவர் அக்டோபர் 11 ஆம் தேதி வஃபாத் ஆனார். இவர் காலித் அஸீஹ் சாஹிபின் தந்தை ஆவார். காலித் அஸீஸ் சாஹிப் எழுதுகிறார். எனது தந்தை இஸ்ஸத் அப்துஸ் ஸமீர் சாஹிப் அக்டோபர் 11 அன்று வஃபாத் ஆனார்கள் என்று பெற்றோர் தொடக்கத்தில் ஜமாஅத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தார்கள். ஆனால் ஜமாஅத்தை கடுமையாக எதிர்த்த எனது சகோதரருடன் ஜமாஅத்தின் உண்மைத்தன்மை குறித்து கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டிருக்கும் போது அதைக் கேட்டு நாங்கள் இரண்டு பேரும் உங்களைப் போன்று முஸ்லிம்கள் ஆவோம். ஆனால் பைஅத் படிவத்தில் கையெழுத்திடுவது அவசியமற்றது என்றார்கள். 2009 -ல் தந்தையின் தோள்பட்டை எலும்பு முறிந்தது. அவர்கள் கொஞ்ச காலம் என்னுடன் தங்குவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அப்போது M.T.A. பார்த்து வந்தார். என்னை சந்திக்க வந்த அஹ்மதிகளுடன் அறிமுகம் கிடைத்தது. இவ்வாறு அவருக்கு திருப்தி ஏற்பட்டதும் 2010 -ல் பைஅத் செய்தார். அவர் நேர்மையானவர். நல்லவர், தஹஜ்ஜுத் தொழுகையை கடைபிடிப்பவர். பிள்ளைகளுக்கு எப்போதும் ஹலாலான ரிஸ்கைத் தான் கொடுத்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் மீது அன்பு மற்றும் தன்னடக்கத்தை கடைபிடித்து நடக்க கற்பித்தார்.

இவர் கூறுகிறார்: 1998 -ல் நான் முதன்முறையாக தந்தையுடன் ஹஜ் செய்தேன். அப்போது நான் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதியாக இருந்தேன். அல்லாஹ் மர்ஹூமீன்களின் தர்ஜாவை உயர்த்துவானாக! இவர்களது பிள்ளைகளைப் பற்றியும், நாட்டைப் பற்றியும் இவர்களுக்கு இருந்த எல்லா நல்ல விருப்பங்களையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAIT-UL-FUTUH MOSQUE, LONDON.
**ON 26.10.2012**

Translated by : Maulavi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456